

நிதி ஆணைக்குழுவின்

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

செலவினத் தலைப்பு இல. – 011

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

நிதி ஆணைக்குழு

2022

உள்ளடக்கம் பக்க எண்

அத்தியாயம் – 01: நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு.....01

அத்தியாயம் – 02: முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 07

அத்தியாயம் – 03: 31டிசம்பர் 2021 இல் முடிவுற்ற வருடத்திற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை.....14

அத்தியாயம் – 04: செயலாற்றுகை குறிகாட்டிகள்.....25

அத்தியாயம் – 05: நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை.....26

அத்தியாயம் – 06: மனித வள விபரம் 28

அத்தியாயம் – 07: இணக்க அறிக்கை 29

அத்தியாயம் – 01: நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

01. அறிமுகம்

பின்னணி

1987 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் பிரகடனப்படுத்தப்பட்ட 13 வது திருத்தத்தின் 154A - 154Q பிரிவின் கீழ் மாகாண சபைகள் நிறுவப்பட்டன. மேற்கூறப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு இணங்க, மாகாண சபைகளின் உருவாக்கங்களின் பொருட்டு ஒரு பரந்த நல்லாட்சி கட்டமைப்பை உருவாக்க 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் இயற்றப்பட்டது.

அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான சேவை வழங்கல் மற்றும் ஒத்தியங்கும் விடயங்களிலான சேவை வழங்களிற்கான பொறுப்புக்களை கொண்டிருப்பதுடன் பொது நிதியை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் பயன்படுத்துதல் மாகாண சபைகளது பொறுப்பாகும். மாகாண சபைகளின் செயல்திறனான செயற்பாட்டிற்க்கு நிதி ஆணைக்குழு தேவையான வழிகாட்டுதல்களையும் வசதிகளையும் வழங்குகிறது.

நிதி ஆணைக்குழுவும் அதன் கட்டளைச் செயல்பாட்டு பொறுப்புக்களும்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின் 154 (R) பிரிவு நிதி ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை வழங்குவதுடன் நிதி ஆணைக்குழுவின் செயல்பாடுகளையும் விபரிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (3), (4) மற்றும் (5) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி நிதி ஆணைக்குழுவின் கட்டளை செயல்பாட்டு பொறுப்புகள் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 154R (3) அரசாங்கம் ஆணைக்குழுவினது பரிந்துரைகள் மற்றும் கலந்தாலோசனைகளுடன் மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யும்.

உறுப்புரை 154R (4) ஜனாதிபதிக்கு பின்வரும் விடயங்களிலில் பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்;

அ) அரசாங்கத்தால் மாகாணங்களின் பயன்பாட்டுக்காக வருடாந்தம் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் தொடர்பாக பல்வேறு மாகாணங்களுக்கிடையே அந்த நிதியினை பகிர்ந்து கொள்வது தொடர்பான நியமங்கள்

ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.

உறுப்புரை 154R(5) நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் அத்தகைய கொள்கைகளை நிதி ஆணைக்குழு ஒழுங்கமைப்பதுடன் அதற்காக பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளும் ;

அ) ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகை,

ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்,

இ) சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக்கொள்வதற்கான முன்னேற்றகரமான தேவைகள் மற்றும்

ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமான வேறுபாடுகளை குறைக்கவும் மகாணங்களிடையே உயர் தலா வருமானத்தை பேணுவதற்குமான முன்னேற்றகரமான தேவைகள்.

அரசியலமைப்புத் தேவைகளுக்கு அமைய நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டு, அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தில் சமர்பிக்க அனுமதி கோரி அவற்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கிறார். அதன்பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (7) இன்

பிரகாரம் நிதி ஆணைக்குழு சமர்ப்பிக்கின்ற பரிந்துரைகள் பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதியால் முன்வைக்கப்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

நிதி ஆணைக்குழு தனது மூலோபாய திட்டத்தை வகுத்துள்ளதுடன் அதனை 2021 முதல் 2024 வரையிலான காலப்பகுதிக்கு புத்துருவாக்கம் செய்துள்ளதுடன் தொலை நோக்கு, பணிக்கூற்று, முனைவு பகுதிகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவை இணங்காணப்பட்டு மூலோபாய திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளது .

தொலை நோக்கு

சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியுடனான சுபீட்சமான தொரு இலங்கை

பணிக்கூற்று

நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக தேவைகளை மதிப்பீட்டாய்வு செய்து மாகாணங்களுக்கிடையே நிதியினை பகிர்ந்து கொள்வதற்கான கொள்கை நியமங்களுடனான பரிந்துரைகளை செய்தல்

முனைவுப் பகுதிகள்

1. தேசிய பாதீட்டிலிருந்து மாகாணங்களுக்கு போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்தல்.
2. மாகாணங்களுக்கிடையில் எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் அத்தகைய நிதியினை ஆண்டுதோறும் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என அதி மேதகு ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல்.
3. மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள் தொடர்பில் அதி மேதகு ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல்.

ஆணைக்குழுவின் குறிக்கோள்கள்

- மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைக்ககூடிய போதுமான நிதியினை வழங்க பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்
- சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை இலக்காக கொண்டு மாகாணங்களிற்கிடையே நிதி வளங்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பு செய்ய பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்
- அரசியலமைப்பின் பிரகாரம் நிதி ஆணைகுழுவுக்கு வழங்கப்பட்ட கட்டளை செயல்பாடுகளை நிறைவு செய்தல்

1.3. பிரதான செயற்பாடுகள்

அரசியலமைப்பின் கட்டளைச் செயற்பாடுகளுக்கு அமைவாக வருடாந்த பாதீட்டிலிருந்து மாகாணங்களுக்கு போதுமான நிதியினை ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாகவும் அத்தகைய நிதி எந்தக் கொள்கையின் அடிப்படையில் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நாட்டின் சமமான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல் நிதி ஆணைக்குழுவின் பிரதான தொழிற்பாடாகும்.

இத்தகைய செயல்முறையில் நிதி ஆணைக்குழுவானது;

I. வருடாந்தம் மாகாண சபைகளிற்கான வருடாந்த வளங்களின் தேவைகளை தயாரித்து சமர்பிக்க மாகாணசபைகளுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்.

II. மாகாண சபை நிறுவனங்களுடனான விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர் மாகாண சபைகளின் தேவைகளை நியாயமான முறையில் மதிப்பீடு செய்தல்.

III. தேசிய வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் மாகாணங்களுக்கிடையில் அத்தகைய நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரைகளைச் செய்தல்.

IV. தேசிய பாதீட்டில் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்காக வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

V. நிதிப் பயன்பாட்டின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்காக அவர்களின் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை வகுக்க மாகாண சபைகளுக்கு உதவுதல்.

1.4 நிறுவனத்தின் பிரதான பிரிவுகள்

ஆணைக்குழுவின் கட்டாய செயல்பாடுகள் மற்றும் நிறுவன செயல்பாடுகளின்படி நிதி ஆணைக்குழு பின்வரும் செயல்பாட்டு மற்றும் துணை சேவை பிரிவுகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- கொள்கை ,கற்கை மற்றும் அறிக்கையிடல் பிரிவு

- மாகாண திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு

- மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு

- மாகாண வருமான பிரிவு

- நிர்வாக பிரிவு

- கணக்குகள் பிரிவு

- உள்ளக கணக்காய்வுப் பிரிவு

நிதி ஆணைக்குழுவின் பிரிவுகளினுடைய தொழிற்பாடுகள்

நிதி ஆணைக்குழுவின் பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. கொள்கை ,கற்கை மற்றும் அறிக்கையிடல் பிரிவு

1. கற்கைகளை மேற்கொள்வதுடன் நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி பகிர்வு கொள்கை நியமங்களை அடையாளம் காணல்

2. நிதி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கான பரிந்துரைகளை தயாரிக்க உதவுதல்.

3. நிதி ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

ஆ. மாகாண திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவு

1. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சேர்ப்பதற்கான மாகாண மூலதனத் தேவைகளை மதிப்பீடு செய்தல்

2. மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்

3 .மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்து அமுலாக்குவதற்கு ஒப்புதல்களை வழங்குதல்

இ. மாகாண மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவு

1. ஒவ்வொரு மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண அதிகார சபைகளின் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மாகாணங்களுக்கு இடையில் கொடைகளை பகிர்ந்தளித்தல்

2. மாகாணங்களின் தேவைகளின் போது குறைநிரப்பு பாதீட்டு ஒதுக்கீடுகளை பரிந்துரை செய்தல்

3. மாகாண ஆளணியினரை நிர்ணயிப்பதில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் தேசிய சம்பள ஆணைக்குழுவுடன் தொடர்புகளைப் பேணுதல்

ஈ. மாகாண வருமான பிரிவு

1. மாகாண வருமான மதிப்பீடு மற்றும் வருமான இலக்குகளை நிர்ணயித்தல்

2. உள்ளூராட்சி மன்றங்களின் வருமான மதிப்பீடு

3. ஆர்வமுடைய பங்குதாரர்களுக்கு மாகாண வருமான தகவல்களை சமர்ப்பித்தல

உ. நிர்வாக பிரிவு

1. நிதி ஆணைக்குழுவின் அன்றாட நிர்வாக விடயங்களில் ஈடுபடல்

2. விடுமுறை, காப்புறுதி, மற்றும் பிற கொடுப்பனவுகள் போக்குவரத்து தனிப்பட்ட கோப்பு விஷயங்கள் மற்றும் சொத்துக்களின் பராமரிப்பு.

3. பயிற்சி மற்றும் மனித வள மேம்பாடு


ஊ. கணக்குகள் பிரிவுபிரிவு

1. நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அறிக்கையிடல்களை தயாரித்தல்

2. நிதிக் கட்டுப்பாடு மற்றும் தகவல்களைப் பராமரித்தல்

3. கொள்முதல் நடவடிக்கைகளை (பொருட்கள் பணிகள் மற்றும் சேவைகள்) செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல

1.5 நிறுவன விளக்கப்படம்



பிப/உப - பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர்
நி.உ - நிர்வாக உத்தியோகத்தர்
த.க.தொ.உ - தகவல் கணணி தொழில்நுட்ப
பு .உ - புள்ளிவிபர உத்தியோகத்தர் உத்தியோகத்தர்

உ.ஆ.உ - உதவி ஆராய்சி உத்தியோகத்தர்
அ. உ - அபிவிருத்தி உத்தியோகத்தர்
பொ.மு.உ.சே - பொது முகமைதுவ உத்தியோகத்தர் சேவை
அ.உ.சே - அலுவலக உதவியாளர் சேவை

1.6 நிதி ஆணைக்குழுவின் கீழ் வரும் நிறுவனங்கள்/நிதியங்கள்

நிதி ஆணைக்குழுவின் கீழ் எந்த நிறுவனங்களும் வருவதில்லை. இது அரசியலமைப்பின் 154 (R) பிரிவின் கட்டாய செயல்பாடுகளின் பிரகாரம் நிறுவப்பட்ட ஒரு சிறப்பு நிறுவனம் ஆகும்(சுயாதீன ஆணைக்குழு)

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (ஏதும் இருப்பின்).

நிதி ஆணைக்குழுவின் கீழ் வெளிநாட்டு நிதியீட்டதுடனான கருத்திட்டங்கள் ஏதுமில்லை .

அ) கருத்திட்டத்தின் பெயர் .: பொருத்தமற்றது

ஆ) கொடைவழங்கும் முகவர் : பொருத்தமற்றது

இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில். : பொருத்தமற்றது

ஈ) கருத்திட்ட காலம் : பொருத்தமற்றது

அத்தியாயம் – 02 முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. முன்னேற்றம்

நிதி ஆணைகுழு 2021 ஆம் ஆண்டின் செயல்திட்ட நடவடிக்கை கலவரயரைக்குள் பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது.

2.1.1 மூலதன பாதீட்டுடன் தொடர்பான விடயங்கள்

I. மாகாண மூலதன தேவை மதிப்பீடிற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்

2022 ஆம் ஆண்டிற்கான மூலதன தேவை மதிப்பீட்டிற்கான வழிகாட்டுதல்கள் மாகாண சபைகளுக்கு 2021 ஜனவரி 15 ஆம் திகதி வழங்கப்பட்டன .

II. 2021 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி திட்டங்களை பரிசீலனை செய்தல்

நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதலுக்கு ஏற்ப வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டங்கள் ஒன்பது மாகாண சபைகளிடமிருந்தும் நிதி ஆணைக்குழுவிற்கு கிடைக்கபெற்றது. ஒவ்வொரு மாகாண சபையின் வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டத்தையும் நிதி ஆணைக்குழு கவனமாக ஆய்வு செய்து, பின்னர் ஒவ்வொரு மாகாண சபையிலும் பின்வருமாறு திட்டமிடப்பட்ட திகதிகளில் மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நிதி ஆணைகுழுவின் தலைவர், அங்கத்தவர்கள், செயலாளர், மற்றும் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்கள உத்தியோகத்தர்கள் அடங்கலான குழுவொன்று, அனைத்து ஒன்பது மாகாணங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு மாகாண அபிவிருத்தி திட்டங்களை மீளாய்வு செய்து அமுல்படுதுவதற்கு ஒப்புதலை வழங்கியிருந்தது. அதிமேதகு ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள், அனைத்து மாகாண அமைச்சு செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் அனைத்து மீளாய்வு கூட்டத்தில் பங்குபற்றினர்.இதன் விளைவாக, மாகாணசபைகளின் நிறுவனகளின் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அபிவிருத்தி திட்டங்களின் பரந்த செயற்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது(இது எழுத்து மூலம்தெரிவிக்கப்பட்டது).

நடத்தப்பட்ட வருடாந்த மீளாய்வு கூட்டங்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது

கூட்டம் நடைபெற்ற திகதிகள்	மாகாணம்
08.02.2021	வட மத்தி
12.02.2021	மேற்கு
18.02.2021	ஊவா
19.02.2021	மத்திய
01.03.2021	தெற்கு
03.03.2021	சப்ரகமுவ
09.03.2021	வட மேற்கு
15.03.2021	வடக்கு
16.03.2021	கிழக்கு

III. 2022 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண தேவைகளின் மதிப்பீடு

அடுத்த ஆண்டுக்கான மாகாண சபைகளின் மூலதனத் தேவைகளை மதிப்பிடுவது ஜனாதிபதிக்கான பரிந்துரையை தயாரிப்பதற்கு ஒரு முன்நிபந்தனையாகும். எனவே நிதி ஆணைக்குழுவால் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி பெற்றுக்கொள்ளப்பட்ட நிதித் தேவைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மாகாண மூலதனத் தேவைகளை மீளாய்வு செய்வதற்காக பின்வரும் கூட்டங்கள் zoom தொழில்நுட்பத்தின் மூலம் தொடர்புடைய மாகாண அதிகாரிகளுடன் நடத்தப்பட்டன, அதற்கேற்ப மாகாணத் தேவைகள் குறித்து ஒன்றுடன் ஒன்றான இரட்டிப்பு தன்மையை தவிர்பதற்கான சாத்தியமான பொதுவான முடிவுகள் எடுக்கப்பட்டன.

Zoom தொழில்நுட்பம் மூலம் நடைபெற்ற கூட்டங்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது,

திகதி	**மாகாணம்**
07.07.2021	ஊவா
08.07.2021	வட மேற்கு
09.07.2021	வடக்கு
12.07.2021	கிழக்கு
13.07.2021	மேற்கு
14.07.2021	மத்திய
15.07.2021	வட மத்திய
16.07.2021	சப்ரகமுவ
19.07.2021	தெற்கு

IV. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன கொடைகள் பற்றி தெரிவிக்கப்பட்டது

2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பாராளுமன்ற ஒப்புதலுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மூலதன கொடைகள் (மா.கு.அ.கொ) - ரூ. 15 பில்லியன், பி.அ.கொ - ரூ. 3 பில்லியன் மற்றும் வெளிநாட்டு உதவித் செயல் திட்டம் - ரூ. 8 பில்லியன்) மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்டது.

மாகாண சபைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் மாகாணங்களின் மீண்டெழும் தேவைகள் மதிப்பிடப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் மாகாண மீண்டெழும் தேவைகள் மற்றும் ஆளணி மதிப்பீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு.

2.1.2 மீண்டெழும் பாதீட்டுடன் தொடர்பான விடயங்கள்

மாகாணங்களின் மீண்டெழும் தேவைகளுக்கான கோரிக்கைகளின் அடிப்படையில் மாகாண மீண்டெழும் தேவைகளுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் மாகாண மீண்டெழும் மற்றும் ஆளணி மதிப்பீட்டு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

I. 2022 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் பாதீட்டு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன

மீண்டெழும் தேவைகள் மதிப்பீடு தொடர்பான வழிகாட்டுதல்கள் 2021, ஜனவரி 18 அன்று மாகாண சபைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் இச் செயல்முறை ஆரம்பிக்கப்படுகின்றது .

இவ் வழிகாட்டுதல்கள் அரசியலமைப்பின் 13 வது திருத்தங்கள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க வழங்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டுதல் முக்கியமாக மாகாணங்களின் தனி நபருக்கான சம்பளங்கள், ஏனைய மீண்டெழும் செலவுகள், உள்ளூராட்சி அதிகார சபைகளின் மாற்றல்கள் மற்றும் வருமான மதிப்பீடுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு மேலதிகமாக, கொடைகளுக்கான கோரிக்கைகளை முன்வைப்பதில், மாகாணங்களால் நிரப்பப்பட வேண்டிய தொடர்புடைய படிவங்களின் தொகுப்பும் அனுப்பப்பட்டது.

II. 2022 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகளின் மதிப்பீடு

வழிகாட்டுதல்களுடன் இணைக்கப்பட்ட நாட்காட்டியினடிப்படையில், மாகாணங்கள் தங்கள் தேவைகளை முறையாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களில் நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்பியது. இதன் விளைவாக, 2022 ஆம் ஆண்டிற்கான மாகாண மீண்டெழும் தேவைகள் மாகாண நிறுவனங்களுடன் கலந்துரையாடி மதிப்பீடு செய்யப்பட்டு, இந்நோக்கத்திற்காக பிரதம செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பாதீட்டு பணிப்பாளர்கள் உட்பட மாகாண அதிகாரிகளுடன் பல சந்திப்புகள் நடைபெற்றது. தேசிய பாதீட்டு திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கூட்டங்களில் பங்குபற்றினர். தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக அனைத்து கூட்டங்களும் ஜூம் தொழில்நுட்பம் மூலம் நடத்தப்பட்டன.

மீண்டெழும் செலவினத் தேவைகளுக்காக நடத்தப்பட்ட வருடாந்த பாதீட்டு கலந்துரையாடல்களின் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

கலந்துரையாடல்களின் திகதி மற்றும் நேரம்	**மாகாணம்**
15.06.2021	மேற்கு
16.06.2021	மத்திய
17.06.2021	சபரகமுவ
18.06.2021	தெற்கு
21.06.2021	வட மத்திய
22.06.2021	கிழக்கு
23.06.2021	வடக்கு
25.06.2021	ஊவா
28.06.2021	வட மேற்கு

III. மாகாணங்களின் மீண்டெழும் மாகாண தேவைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குதல்

மாகாணங்களுடனான கலந்துரையாடலின் பின்னர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பொது திறைசேரிக்கு அனுப்புவதற்கு முன்னர் மாகாண மீண்டெழும் தேவைகள் இறுதி செய்யப்பட்டு நிதி ஆணைக்குழுவின் அனுமதிபெறப்பட்டது. அத்துடன் 2022 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் அதி மேதகு ஜனாதிபதிக்கு சமர்பிக்கப்பட்டது . பரிந்துரைக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் ரூபா. 344,861 மில்லியன் என20.08.2021 அன்று திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டது. (வருவாய் மாற்றல்கள் உட்பட).

IV.மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளை அறிவித்தல்

2022 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் ஒப்புதலுக்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த மீண்டெழும் செலவு ரூபா 320,369 என நிதி ஆணைக்குழு 17.11.2021 அன்று மாகாணசபைகளுக்கு அறிவித்தது.

*V.*குறைநிரப்பு பாதீட்டு பரிந்துரைகள்

பொது நடவடிக்கைகள் தவிர மாகாண சபையினால் விடுக்கப்பட்ட குறைநிரப்பு பாதிட்டு ஒதுக்கீடுகளுக்கான கோரிக்கைகள் பொது திறைசேரிக்கு மாகாணங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக பரிந்துரைக்கப்பட்டது .பரிந்துரைக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு

(ரூ'000)

திகதி	பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான குறைநிரப்பு பரிந்துரைகள்	நிரல் அமைச்சின் இணைப்புக்களுக்காக குறைநிரப்பு பரிந்துரைகள்	புதிய பரிந்துரைகள்	**மொத்த பரிந்துரைகள்**
2021.05.06	3,125,068	447,803	2,030,617	5,603,488
2021.06.10	0	0	215,018	215,018
2021.07.02	101,599	289,948	5,514,096	5,905,643
2021.09.15	46,891	72,068	479,754	598,713
2021.12.08	4,513	180,748	727,202	912,463
2021.12.20	0	0	9,655	9,655
மொத்தம்	**3,278,071**	**990,567**	**8,976,342**	**13,244,980**

2.1.3அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்பிக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான விடயங்கள்

I. 2022 ஆம் ஆண்டுக்குரிய அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செய்தல்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் *154 R* இன் படி நிதி ஆணைக்குழு அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் இருந்து மாகாண சபைகளுக்கான நிதியை வழங்குவதில் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் குறித்து பரிந்துரைகளை செய்யும். அதன்படி, பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல், மாகாணங்களின் அதி விசேடமாக உணரப்பட்ட பகுதிகள்/துறைகளுக்கு வளங்களை ஒதுக்க வேண்டியதன் அவசியத்தையும், தேசிய மட்டத்தில் உள்ள நிரல் /இராஜங்க அமைச்சுகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபைகள் முரண்பாடுகளை நீக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிதி ஆணைக்குழு *2022* ஆம் ஆண்டுக்கான தனது பரிந்துரைகளை அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு *2021* ஆம் ஆண்டு ஒக்டோபர் *04* ஆம் திகதி , வழங்கியுள்ளது. மேலும், சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைய தேசிய மட்ட அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும் போது மாகாணங்களின் உள்ளார்ந்த தேவைகளைக் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறையை மாற்றியமைப்பதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

பரிந்துரைகளின் அறிக்கையின் அறிக்கை பின்வரும் அத்தியாயங்களை கொண்டுள்ளது

அத்தியாயம் 1: அறிமுகம்

அத்தியாயம் 2: பரிந்துரைகளை செய்வதில் கவனத்திற் கொள்ளப்படும் அரசியலமைப்பு மற்றும் கொள்கை வழிகாட்டுதல்கள் மற்றும் ஏனைய விடயங்கள்

அத்தியாயம் 3:தேசிய வரவு செலவு திட்டமும் மாகாண சபைகளிற்கான அரச கொடைகளும்

அத்தியாயம் 4:மாகாண சபைகளுக்கான கொடைகளை பரிந்துரைப்பதற்கான மூலதனம் மற்றும் மீண்டெழும் தேவைகளின் மதிப்பீடு

அத்தியாயம் 5:2022 ஆம் ஆண்டுக்கான அரச கொடைகளை மாகாண சபைகளுக்கிடையில் பகிர்ந்தளளிப்பதற்க்கான பரிந்துரைகள்

பரிந்துரை அறிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தில், தேசிய பாதீடிளிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதி அளவுகோள்களின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுவதனை விளக்குகின்றது. அதே சமயத்தில், இந்த அத்தியாயம் 2022 ஆம் ஆண்டுக்கென நிதி ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான மூலதனம் மற்றும் மீண்டெழும் தொகைகள் சுட்டிக்காட்டுகின்றது.

நடைமுறையில் அரசாங்கம் முகம்கொடுக்கும் உள்ள நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, நிதி ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டுக்கான மாகாணங்களுக்குரிய மூலதன கொடைகளை இரண்டு தெரிவுகளின் கீழ் மாகாண சபைகளுக்குப் பரிந்துரைத்துள்ளது.இதனடிப்படையில் மொத்த தொகை தெரிவு 1 மற்றும் தெரிவு 2 இன் கீழ் முறையே ரூ. 220,000 மில்லியன் மற்றும் ரூ. 100000 மில்லியன் மாகாண சபைக்காக பரிந்துரைக்கப்பட்டது.அதே சமயத்தில் மொத்த தொகையான ரூ. 344,841 மில்லியன் 2022 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் பாதீட்டின் கீழ் மாகாண சபைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

அத்தியாயம் 6: மாகாண மட்டத்தில் நியாயமான ஒதுக்கீடுகள் மற்றும் வினைத்திறனான வள பயன்பாட்டு நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகள்

பரிந்துரை அறிக்கையின் இந்த அத்தியாயத்தில் நிதி ஆணைக்குழு கொள்கைப் பரிந்துரைகளை அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு மாகாணங்களுக்கான வள ஒதுக்கீடு தொடர்பாக மாகாண சபைகளில் மிக அவசியமென உணரப்பட்ட பகுதிகள்/துறைகளுக்கு வளங்களை ஒதுக்க வேண்டியதன் அவசியத்தை முன்வைகின்றது.மாகாண சபைகள் மற்றும் அதனைப்போலவே தேசிய அளவிலான முகவர்களுக்கிடையில் காணப்படும் சில முரண்பாடுகளை நீக்குதல் மற்றும் அவற்றுக்கான திருத்தங்களைக் கோருதல் தொடர்பாகவும் பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரிந்துரைகளில் ஆணைக்குழு மூலதன பாதீட்டு ஒதுக்கீட்டில் குறைந்தது 20% நேரடி கொடை வடிவில் மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென முன்மொழிந்துள்ளது .தேசிய திட்டங்கள் / நிகழ்ச்சி திட்டங்கள் மாகாண மற்றும் மாவட்ட வேலைத்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்துவதில் மாகாண சபைகளை மேலும் மேலும் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம், மனித வளங்கள் உட்பட மாகாண சபை அமைப்பில் உள்ள வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது. அதே சமயம், தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறையை ஏற்றுக்கொள்வதன் அவசியத்தை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது, அதே சமயம் சமச்சீர் பிராந்திய அபிவிருத்தியின் நோக்கத்தை அடையவும், வள பயன்பாட்டின் இரட்டிப்பு தன்மையை குறைக்கவும் வளபயன்பாடின் செயல்திறனை அதிகரிக்கவும் முன்மொழிந்துள்ளது .இதற்கு மேலதிகமாக கட்டுமான செயல் திட்டங்களுக்கு நிர்வாக செலவுகளை ஒதுக்கீடு செய்யும்போதும் மேலும் வாழ்வாதார அபிவிருத்தி செயல் திட்டங்களின் கீழ் பயனாளிகளின் பங்களிப்பில் மாகாண அதிகாரிகள் சிரமங்களை எதிர்கொள்வதால், தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளை நீக்க ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதே நேரத்தில், பராமரிப்பு, பாதிப்படைந்த சிறு துறைகள், பாதிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற பிரிவுகளுக்கான சமூக உதவிகள் மற்றும்

உள்ளூராட்சி மன்றங்களின் கொடைகள் போன்ற சில நடவடிக்கைகளுக்கு மாகாண அளவில் நிதி கிடைப்பதை உறுதி செய்யவும் ஆணைகுழு பரிந்துரை செய்கிறது.

II. 2022 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகளை பாராளுமன்றதிற்கு சமர்பித்தல்

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக 2021 ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி அதி மேதகு ஜனாதிபதி அவர்களால் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும், பாராளுமன்றத்திற்க்கு சமர்பிக்கவும் அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்பிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் 270 பிரதிகள் மும் மொழிகளில் 2021 டிசம்பர் 27 ஆம் திகதி பாராளுமன்றதிற்க்கு அனுப்பப்பட்டன. அவை 2022 ஜனவரி 20 ஆம் திகதி பாராளுமன்றதில் சமர்ப்பிக்கப்பட்டன.

III. 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்று அறிக்கையை பாராளுமன்றதிற்கு சமர்பித்தல்

பொது நிதித் திணைக்களம், அரச நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான பொதுவான படிவத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது கணக்கறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அறிக்கைகளுடன் ஜனாதிபதி செயலகம் மற்றும் பாராளுமன்றத்திற்கு மூன்று மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்டது.

2.2 சிறப்பு அடைவுகள்

i. 2022 ஆம் ஆண்டிற்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அதி மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதி அளிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ii. நிதிஆணைக்குழுவின் வருடாந்த நடவடிக்கை திட்டம், தேவையான பணிகளை நிறைவேற்றுவதற்காக, மூலோபாய திட்டத்திற்கு (2021-2024) இணங்க மீள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

iii. தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிரல் அமைச்சுக்களின் வேண்டுகோளின் களின்படி, தேசிய நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுடன் ஒருங்கிணைத்தது பாதீட்டு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த , நிதி ஆணைக்குழு சில தேவையான வழிகாட்டுதல்களை வழங்க ஈடுபட்டது மற்றும் கிராமிய மருத்துவமனை அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்டங்களை (ரூ. 5000 மில்லியன்), தேசிய , மாகாண ஆயுர்வேத மருத்துவமனைகளின் அபிவிருத்தி (ரூ.320 மில்லியன்.), கிராமிய விளையாட்டு அபிவிருத்தி (ரூ.265.6 மில்லியன்.), பொது விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்திதிட்டம் (ரூ.830 மில்லியன்.) மற்றும் இயற்கை உரங்கள் உற்பத்திக்கான திட்டம் (ரூ.2600. மில்லியன்.).

iv. சுகாதார அமைச்சு , தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், பிரதம செயலாளர்கள், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்கள் அணைத்து ஒன்பது மாகாணங்களின் சுகாதார சேவைகளின் மாகாண பணிப்பாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் கிராமப்புற மருத்துவமனை அபிவிருத்திக்கான பாதீட்டு முன்மொழிவுகள் குறித்த ஆரம்ப கூட்டம் 08 ஏப்ரல் 2021 அன்று நிதி ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டது. மாகாண சுகாதார அமைச்சுகளுக்கு கிராமப்புற வைத்தியசாலை அபிவிருத்திக்கான அபிவிருத்தித் திட்டங்களை தயாரிக்கவும், ஒதுக்கப்பட்ட பாதீட்டு திட்டத்துக்குள் சேவைகளை பயனாளிகளுக்கு வழங்கக்கூடிய வகையில் செயற்பாடுகளை முடிக்கவும், இவ்வாறான செயற்பாடுகளை நடப்பு ஆண்டிற்குள் செய்து முடிக்கவும் மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு. கிராமப்புற மருத்துவமனை அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கான நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, ஒன்பது மாகாணங்களும் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பித்தன, அவை ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய தேசிய நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. மேற்கண்ட அதிகாரிகளின்

பங்கேற்புடன் 2021 ஏப்ரல் 27 முதல் 30 வரை தொடர் zoom கூட்டங்கள் நடத்தி, திட்டங்களின் அபிவிருத்தி பகுதிகளுக்கு கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அதே அதிகாரிகளின் பங்கேற்புடன் திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக 11 ஆகஸ்ட் 2021 அன்று zoom கூட்டம் நடைபெற்றது.

v. நிதி ஆணைக்குழுவின் தலைவரும் செயலாளரும், நிதி ஆணைக்குழுவின் ஏனைய தொடர்புடைய அதிகாரிகளும் 2021 டிசம்பர் 15 ஆம் திகதி ரிதியகம தடுப்பு இல்லத்திற்குச் சென்று, வீட்டின் தற்போதைய நிலைமையை ஆராய்ந்ததோடு, தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் அக்குரஸ்ஸ விகாரமஹாதேவி சான்றளிக்கப்பட்ட பாடசாலை பற்றியும் கலந்துரையாடினர். பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்), முன்னாள் ஆணையாளர் மற்றும் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் மற்றும் தென்மாகாண சபையின் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர். அதனையடுத்து, ரிதியகம தடுப்பு இல்லத்தின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மேலதிகத் தீர்மானங்களை உரிய அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றின் ஊடாக மேற்கொள்ளுமாறு நீதியமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

2.3சவால்கள் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

முக்கியமாக கோவிட்-19 பரவல் மூலம் நாட்டில் நிலவும் நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக, தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் அபிவிருத்தி தலையீடுகளுக்கான நிதி மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கிடையில் ஒரு அறிவுசார் வள ஒதுக்கீடு முன்பை விட மிகவும் சவாலானது, எனவே, இந்த பற்றாக்குறை வளங்களில் இருந்து அதிகபட்ச பலன்களைப் பெறுவதற்கு ஆணைக்குழு தனது பரிந்துரைகளை வழங்கும் போது மிகவும் முக்கியமான பகுதிகள் மற்றும் துறைகளில் அதிக கவனம் செலுத்தவேண்டியிருந்தது.

நிதி ஆணைக்குழுவின் பொறுப்புகளை குறிப்பிடுவதில், அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (5) இல் ''சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை'' அடையும் நோக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நிரல் அமைச்சுக்கு கிடைக்கும் வளங்களுடன் ஒப்பிடும்போது(பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கான) மாகாண சபைகளால் பெறப்பட்ட நிதி போதுமானதாக இல்லை இதன் காரணமாக இந்த நோக்கத்தை மாகாண சபை முறையால் மட்டுமே அடைய முடியாது என்று இந்த ஆணைக்குழு நம்புகிறது. இரண்டாவதாக, மையத்தில் உள்ள நிறுவனங்கள் (நிரல் அமைச்சு மற்றும் இராஜங்க அமைச்சு) திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை முழு நாட்டினதும் நலனுக்காக அல்லது மாகாண எல்லைகளுக்கு அப்பால் விரிந்துள்ள ஒரு பெரிய புவியியல் பகுதியில் செயல்படுத்துவதற்கு பொறுப்புள்ளது. எனவே நிரல் அமைச்சு மற்றும் இராஜங்க அமைச்சின் நிறுவனங்கள் பல்வேறு திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில்" சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி" என்ற கருத்தை திட்டமிடல் செயல்பாட்டில் வலியுறுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, " சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை " அடைவதற்கு தொழிற்படும் போது, "சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை" நோக்காக கொண்டு மையத்தில் வளங்களை ஒதுக்குவதற்கு (அதாவது தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம்) பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறி முறையை ஏற்றுக்கொண்டு பொறுப்பான நிரல் அமைச்சு/இராஜங்க அமைச்சு மற்றும் சிறந்த திட்டமிடல் பொறிமுறையைக் கொண்டு மாகாண சபைகளுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பை ஒருங்கிணைத்து, ஒரு பொதுவான மற்றும் ஒருங்கிணைந்த திட்டமிடல் பொறிமுறையை பின்பற்றுவது அவசியம். மாகாணங்கள்/ மாவட்டங்களில் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிரல் அமைச்சுக்களால் நிதி ஒதுக்கீடு செய்யும்போது நிதி ஆணைக்குழு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து பிராந்திய சமத்துவமின்மையின் அடிப்படையில் சில விகிதங்கள் உருவாக்கப்பட்டு சில அளவுகோல்களைப்பயன்படுத்த ஆணைக்குழு ஆலோசனை வழங்குகிறது. இதன் காரணமாக பின்தங்கிய பிராந்தியங்கள் இந்த திட்டங்களின் கீழ் நியாயமான பங்கினை பெற்றுக்கொள்ளும்.

அத்தியாயம் 03: 31டிசம்பர் 2021 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		82,912,000	99,860,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		111,280	90,277	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		3,147,581	2,407,511	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		86,170,861	102,357,788	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		86,170,861	102,357,788	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		3,087	42,097	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		86,167,774	102,315,691	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
67,200,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	50,811,429	47,212,564	
33,330,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	25,767,969	22,915,267	ஏசீஏ-2(ii)
1,000,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	707,312	835,772	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
101,530,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		77,286,710	70,963,603	
	மூலதனம் செலவினம்				
1,100,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	460,928	-	
7,100,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	6,750,874	15,892,123	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,000,000	திறன் விருத்தி	14	29,092	116,100	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
9,200,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		7,240,894	16,008,223	
	வைப்புக் கொடுப்பனவுகள்		801,775	12,272,190	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		3,123,765	2,180,042	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		3,925,540	14,452,232	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		88,453,144	101,424,058	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(2,285,370)	891,634	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		2,285,370	891,634	ஏசீஏ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3

1

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	801,008,673	793,432,259
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	9,674,870	9,698,686
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	42,097
மொத்த சொத்துக்கள்		**810,683,543**	**803,173,042**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		9,665,365	8,998,686
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		801,008,673	793,432,259
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	9,505	700,000
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	42,097
மொத்தப் பொறுப்புக்கள்		**810,683,543**	**803,173,042**

பக்க இலக்கம் 08 முதல் 32 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 33 முதல் 41 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 17/02/2022	திகதி :	திகதி : 17/02/2022

A. T. M. U. D. B. Tennakoon
Secretary
Finance Commission

Sandya Kumudini Kothalawala
Chief Accountant
